ரேச்சல் கார்சனும்

உலகை மாற்றிய அவரது புத்தகமும்

ஆங்கிலத்தில்: லாரி லாலர்,
படங்கள்: லாரா பீங்கெஸ்னர்
தமிழில்: குமரேசன் முருகானந்தம்



"பூமியின் அதிசயத்தையும் அழகையும் நீங்கள் உணர்ந்தும், அதைப் பற்றி மேலும் அறிய விரும்புவீர்கள்" என்று முன்னோடி சுற்றுச்சூழல் ஆர்வலர் **ரேச்சல் கார்சன்** எழுதினார். **ரேச்சல்** இயற்கையை ஆராய்வதற்கு பல சாகச வழிகளைக் கண்டுபிடித்தார். அவர் பவளப்பாறைகளை ஆராய டைவிங் சென்றார் மற்றும் புளோரிடா எவர்க்லேட்ஸ் வழியாக "கிளேட்ஸ் பக்கி" வாகனத்தின் மீதிருந்து முதலைகளைக் கண்காணித்தார். இருப்பினும், அவர் செய்த துணிச்சலான காரியங்களில் ஒன்று, சைலண்ட் ஸ்பிரிங் என்ற புத்தகத்தை எழுதி வெளியிட்டது, இது வாழும் உலகில் இரசாயனங்களின் ஆபத்தான விளைவுகளை சுட்டிக்காட்டுகிறது. சக்திவாய்ந்த மனிதர்கள் புத்தகத்தின் வெளியீட்டை நிறுத்த் முயன்றனர், ஆனால் **ரேச்சலும்** அவரது வெளியீட்டாளர்களும் விடாப்பிடியாக இருந்தனர், மேலும் சைலண்ட் ஸ்பிரிங் நமது கிரகத்தில் மனிதர்கள் ஏற்படுத்தும் தீங்கு விளைவிக்கும் தாக்கத்திற்கு மக்களை எழுச்சியுறச் செய்த புத்தகமாக மாறியது.

ரேச்சல் கார்சனும்

உலகை மாற்றிய அவரது புத்தகமும்

ஆங்கிலத்தில்: லாரி லாலர்,
படங்கள்: லாரா பீங்கெஸ்னர்
தமிழில்: குமரேசன் முருகானந்தம்

மே 1922 இல் ஒரு நாள் அதிகாலையில், சிறுமி **ரேச்சல் கார்சன்**, பைன் ஊசிஇல்லைகள் மணக்கும் காடுகளில் "***டிவிக் டிவிக் டிவிக்!***" என்று கூச்சலிட்டபடி பறந்த **எல்லோ துரோட்** என்றழைக்கப்படும் ஒரு சிட்டுக்குருவியின் ரகசிய இடம் ஒன்றைக் கண்டுபிடித்தாள். **அலெகெனி ஆற்றின்** குறுக்கேயும் மலைகளில் ஏறி இறங்கியும், ஒலி எழுப்பிய அந்த வனப் பறவையை **ரேச்சல்** பின்தொடர்ந்தாள். ஒரு புதரில் மறைந்திருந்த அதன் கூட்டை அடையும் வரைஅவள் நிற்கவில்லை. கூட்டை நெருங்க நெருங்க அவள் தவழ்ந்து சென்றாள். கேமராவில் கிளிக் செய்ய!

வெள்ளை மற்றும் பழுப்பு நிற புள்ளிகளைக் கொண்ட பளபளக்கும் பழங்கள் போன்ற விலைமதிப்பற்ற நான்கு முட்டைகள் இருந்ததை அவளது கேமரா படம் பிடித்தது.

ரேச்சல் கார்சன் அவரது வாழ்நாள் முழுவதும், ஆர்வமுள்ளவராகவும் உறுதிமிக்கவராகவும் இருந்தார். அவர் மே 27, 1907 அன்று ***பென்சில்வேனியாவில்*** உள்ள ***ஸ்பிரிங்டேல்*** என்ற சிறிய நகரத்தின் புறநகர் பகுதியில் பிறந்தார். அவருடைய சகோதரனும் சகோதரியும் வயதில் மிகவும் மூத்தவர்களாக இருந்ததாலும், அக்கம்பக்கத்தில் உள்ள பிள்ளைகள் எப்போதாவது வந்து செல்பவர்களாக இருந்ததாலும், **ரேச்சல்** தன் குடும்பத்தின் அறுபத்தைந்து ஏக்கர் காடுகள், பழத்தோட்டங்கள் மற்றும் வயல்களை ஆராய்வதற்காக அடிக்கடி தனியாகச் சென்றார்.

பாசம் மிக்க அவளுடைய அம்மாவும் இயற்கையை நேசித்தார்கள். அவர் **ரேச்சலுக்கு** விண்மீன்கள் நிறைந்த இரவுகளில் ஆகாயத்தைக் கவனிக்கவும், ஒரு **உட் திராஷ்** பறவையின் மனதை நெகிழச் செய்யும் இசையை எவ்வாறு கண்டுகொள்வது என்று கற்றுத்தந்தார்கள். **ரேச்சல்** எப்போதும் படித்தபடியும், பள்ளியில் கடினமாக உழைத்தவாறும் இருந்தாள். அவளுக்கு பதினொரு வயதாக இருந்தபோது, ஒரு துணிச்சலான விமானியைப் பற்றிய அவள் எழுதிய கதை ஒன்று பரிசை வென்றது மேலும் குழந்தைகளுக்கான ***செயின்ட் நிக்கோலஸ்*** இதழில் வெளியிடப்பட்டது. அவள் ஒரு எழுத்தாளராக முடிவு செய்தாள்.

வாழ்க்கை மிகவும் கடினமானதாக இருந்த காலக்கட்டம் அது. பல்வேறு இடங்களுக்குபயணித்து பொருட்களை விற்கும் ஒரு *பயணிக்கும் விற்பனையாளரான* **ரேச்சலின் தந்தை** வாழ்க்கையை நடத்த பெரிதும் போராடினார். பெருமிதம் மிக்க அவரது தாய், கல்விக்கான உதவித்தொகைப் பெற்றிருந்த **ரேச்சலை பிட்ஸ்பர்க்கில்** உள்ள **பென்சில்வேனியா** பெண்கள் கல்லூரிக்கு (பின்னர் **சேத்தம்** கல்லூரி என்று அழைக்கப்பட்டது) அனுப்ப உதவியாகும் வகையில் **பியானோ** மாணவர்களின் எண்ணிக்கையை இரட்டிப்பாக்கியதோடு, ஆப்பிள் மற்றும் கோழிகளையும் விற்றார், —பாரம்பரிய குடும்ப **சீன பீங்கான்** பாத்திரங்களையும் கூட விற்றார்— **ரேச்சல் மாடல் டி** வாடகை வாகனத்தில் ஏறி விடைபெற்றுச் சென்றார். கூச்ச சுபாவமுள்ள **ரேச்சலுக்கு** கல்லூரி ஒரு புதிய உலகமாக இருந்தது. **எழுத்து** வகுப்புகளை ரசித்த அவள்,
விருந்துகளிலும் நடனங்களிலும் சங்கட்டமாக உணர்ந்தாள்.
மற்ற அனைவரும் ஆடம்பர உடை அணிந்து
கார்ணீகி மியூசிக் ஹாலில் ஓர் இசைக்கச்சேரிக்குச் சென்றபோது,
ரேச்சல் அருகிலுள்ள இயற்கை வரலாற்று அருங்காட்சியகத்தில்
பஞ்சடைப்பட்ட பறவை மாதிரிகளை ஆராய நழுவினாள்.
கடுகடுப்பாக்க காட்டிக்கொளும் **ரேச்சலின்** தாய் **ரேச்சலின்** ஆவணங்களை தட்டச்சு செய்ய கிட்டத்தட்ட ஒவ்வொரு வார இறுதியிலும் கல்லூரிக்கு வந்த போது சமூக வாழ்க்கை குறிப்பிடதத்தக்க வகையில் மேம்படவில்லை.

ரேச்சல் கல்லூரியின் முதலாம் ஆண்டு
கோடை விடுமுறையில் வீட்டிற்கு
வந்தபோது, எங்கும்ஒரு துர்நாற்றம் வீசியது.
வானத்தில் புகை மூட்டமாக இருந்தது.
ஆற்றில் மாசு மிதந்தது. தொழிற்சாலைகள் மற்றும் வீடுகள்
கட்டுவதற்காக மரங்கள் வெட்டப்பட்டன.
அவரது நெருக்கடியான குடும்ப வீட்டில் அவளுடைய பெற்றோர்,
வறுமையில் வாடும் அவளது சகோதரன், அவனது மனைவி மற்றும்
எப்போதும் அழுதபடி இருக்கும் அவர்களின் குழந்தை, விவாகரத்து பெற்ற
அவளது சகோதரி மற்றும் அவளுடைய இரண்டு குறும்புக்கார குழந்தைகள்
என்று சண்டை சச்சரவு செய்தபடி பலர் நிறைந்திருந்தனர்:
முன் முற்றத்தில் கூடாரம் போடப்பட்டிருந்தாலும்,
அனைவருக்கும் இடம் போதாதாகவே இருந்தது.
ரேச்சல் *எங்கே தப்பிச் செல்ல முடியும்?*
இவையனைத்தும், சுற்றுச்சூழல் பற்றியும் அவளது
சொந்த எதிர்காலம் பற்றியும் அவளை சோகத்திலும்
கவலையிலும் ஆழ்த்தியது.

அவள் கல்லூரிக்குத் திரும்பியதும்,
கலகலப்பான மிஸ் **மேரி ஸ்காட் ஸ்கின்கர்**
கற்பித்த உயிரியல் வகுப்பு அவளது
வாழ்க்கையை மாற்றியது. ஒரு சில பெண்களே
அறிவியலில் வாழ்க்கைத்தொழிலாகக்
கொண்டிருந்த அக்காலக்கட்டத்தில்,
ரேச்சல் ஒரு உயிரியலாளராக ஆவதற்கு முடிவெடுத்தாள்.
விலங்குகள் மற்றும் தாவரங்களைப் பற்றி அவள் நிறைய கற்றுக்கொள்ள
விரும்பினாள். உயர்கல்விக்கு பணம் செலுத்துவதற்கான ஒரு வழியைக் கண்டுபிடிக்க
முடியும் என்று அவளுக்கு நம்பிக்கை இருந்தது. அதை உறுதி செய்யும் வகையில்,
அவளுக்கு **ஜான்ஸ் ஹாப்கின்ஸ்** பல்கலைக்கழகத்தின் முழு உதவித்தொகை
கிடைக்கப் பெற்றாள்.

இருபத்தி இரண்டு வயதான **ரேச்சல்**, பட்டப் படிப்பைத் தொடங்குவதற்கு முன் கோடையில் ஒரு நாள், **மாசசூசெட்ஸில்** உள்ள **வூட்ஸ் ஹோல்**, கடல் உயிரியல் ஆய்வகத்தில் ஆராய்ச்சிக்காகச் சென்றாள். முதல் முறையாக **அட்லாண்டிக்** பெருங்கடலின் பக்கத்தில் அவள் நின்றபோது, ஆர்ப்பரிக்கும் அலை மற்றும் வானத்தின் அழகில் மனதைத் தொலைத்து நின்றாள். நுரைத்த அலைகள் மோதின . கடல் பறவைகள் கூச்சலிட்டன. உப்பின் மணம் காற்றை நிரப்பியது. அலை நீர் குட்டைகளில் வினோதமான உயிரினங்கள் தத்தளித்தன. கடல் அலைகளுக்கு கீழே ஆழ்கடலில்எத்தகைய உயிரினங்களின் வாழ்க்கை மறைந்துள்ளது?
என்று வியந்தாள்.

அவள் முதுகலைப் பட்டம் பெற்றாள் - அவள் வகுப்பில் இருந்த ஒரு சில பெண்களில் அவள் ஒருத்தி மட்டுமே. பெரும் பொருளாதார மந்தநிலை மற்றும் பெரும் வேலையின்மையின் காலம், அது அவள் படிப்பைத் தொடரும் நம்பிக்கையைத் தகர்த்தது. ஒரு பெண் உயிரியலாளரைப் பணியமர்த்த எவரும் விரும்பவில்லை. அவரது தந்தை இறந்தபோது, இருபத்தெட்டே வயதான **ரேச்சல்** தனது குடும்பத்தைக் காப்பாற்ற பணத்திற்காக மிகவும் போராட வேண்டிய நிலையில் இருந்தாள். அவரது தாய், நோய்வாய்ப்பட்ட சகோதரி மற்றும் இரண்டு இளம் மருமகள்கள் **ரேச்சலின் மேரிலாண்ட்** வீட்டில் மிகவும் நெருக்கமான சூழலில் வாழ்ந்தனர். பகுதி நேர வேலைகள், கற்பித்தல் மற்றும் செய்தித்தாள்களில் கட்டுரைகளை எழுதுவது போன்றவற்றில் கிடைத்த வருமானம் வாடகை மற்றும் மளிகை கட்டணங்களை செலுத்தவே போதவில்லை. **ரேச்சல்** தனது முன்னாள் ஆசிரியரை அணுகினார். அரசாங்க விஞ்ஞானியாவதற்கான தேர்வை எழுத **மிஸ் ஸ்கின்கர்** பரிந்துரைத்தார். **ரேச்சல்** தேர்வில் தேர்ச்சி பெற்றார், இருந்தாலும் அவருக்கு வேலை கிடைக்கவில்லை. அவள் தளரவில்லை. அவள் பலரை நேரில் அனுகியதொடு கடிதங்களை அனுப்பியவாறும் இருந்தாள்.

ஒரு நாள் **ரேச்சலை** நேர்முக தேர்வு செய்த மீன்வளப் பணியகத்தின் தலைவர், மன்னிக்கவும், வேலை இல்லை, என்று அவளிடம் கூறினார். கடல் வாழ்க்கையைப் பற்றிய சுவாரஸ்யமில்லாத வானொலி உரைகளை சரிசெய்ய முயற்சிப்பதில் அவள் ஆர்வமாக இருப்பாளா? என்று கேட்டார். மற்ற எல்லா எழுத்தாளர்களும் முயற்சி செய்து தோல்வியடைந்துவிட்டனர். "உன்னுடைய ஒரு உரையையும் நான் பார்த்ததில்லை, இருந்தாலும் நான் ஒரு வாய்ப்பைத் தரப் போகிறேன்" என்று அவர் சொன்னதை அவள் பின்னர் நினைவு கூர்ந்தாள். இது **ரேச்சலின்** அதிர்ஷ்டகரமான வாய்ப்பு. அவளது உரைகள் வெற்றியடைந்தன. அவர் மீன்வளப் பணியகத்தில் உயிரியலாளராக முழுநேர பணியில் சேர்ந்தாள், அங்கிருந்த ஊழியர்களில் இரண்டு பெண் வல்லுநர்களில் அவள் ஒருவள். ஒரு வானொலி ஒலிபரப்பிற்காக கடலைப் பற்றி எழுத அவள் நியமிக்கப்பட்டபோது, அந்த விடயங்களே , "நிலைமையை வழிநடத்தியது." என்று அவர் கூறினார். அவளுடைய அதிகாரி அவளுடைய நீண்ட உரையைப் படித்துவிட்டு, கண் சிமிட்டலுடன் "அது போதுமானதாக இருக்கும் என்று நினைக்கவில்லை. மீண்டும் முயற்சி செய்வது நல்லது என்று கூறி, அதை அவளிடமே திருப்பிக் கொடுத்தார். இருந்தாலும் இதை அட்லாண்டிக் சஞ்சிகைக்கு அனுப்புங்கள், என்றார்.

Atlantic

அவள் அவரின் அறிவுரையைப் பின்பற்றினாள். அச்சஞ்சிகை "அன்டர் சீ"யை வெளியிட்டபோது, சாதாரண வாசகர்களுக்காக கடல் பற்றி ஏன் நீங்கள் எழுதக்கூடாது? என்று கேட்டு ஒரு புத்தக பதிப்பக ஆசிரியர் ஒருவர் **ரேச்சலை** அணுகினார்.

1941 ஆம் ஆண்டில் அவர் தனது முதல் புத்தகமான **அண்டர் தி சீ-விண்ட்: எ நேச்சுரலிஸ்ட் பிக்சர் ஆஃப் ஓஷன் லைஃப்** என்ற புத்தகத்தை வெளியிட்டார், அது **ஹவாயில்** உள்ள **பேர்ல் ஹார்பர்** குண்டுவீசி தாக்கப்பட்ட மற்றும் அமெரிக்கா இரண்டாம் உலகப் போரில் ஈடுபடத் தொடங்கிய காலமாகும், புத்தகம்—பெரும்பாலும் கவனிக்கப்படாமல்—விற்பனையாகாமல் விரைவில் புத்தகக் கடை அலமாரிகளில் இருந்து அகற்றப்பட்டது.

ரேச்சல் ஆராய்ச்சியையும் சுற்றுச்சூழலில் உள்ள குறிப்பிடத்தக்க பிணைப்புகளைப் பற்றி எழுதுவதையும் நிறுத்தவில்லை.
"பூமியின் அதிசயம் மற்றும் அழகை நீங்கள் அறிந்தீர்களானால், நீங்கள் அதைப் பற்றி மேலும் தெரிந்துகொள்ள விரும்புவீர்கள்." என்று அவர் தனது குறிப்பேட்டில் எழுதினார்.



பதினைந்து வருடங்கள் உயிரியலாளராக இருந்த அவர், பெண்கள் துணிவாகச் செல்லாத இடங்களுக்குச் சென்றார். நோவா ஸ்கோடியாவிற்கு தெற்கே பனிமூட்டத்தோடு ஆபத்தான நீரோட்டங்களில் ஆழ்கடல் மீன்களை கணக்கிடுவது; புளோரிடா கடற்கரையில் எண்பத்து நான்கு-பவுண்டு டைவிங் ஹெல்மெட்டுடன் ஒரு சிறப்பு உடையில் நீரிடைப்பாறை விலங்குகளை கண்கானிப்பது; புளோரிடா எவர்க்லேட்ஸ் சதுப்பு நிலத்தில் இரைச்சலிடும் "கிலேட்ஸ் பக்கி" வாகனத்தின் மேல் இருந்தவாறு முதலைகளைக் கண்காணிப்பது போன்ற பெண்கள் செய்யத் துனியாத காரியங்களைச் செய்தார்.

இதற்கிடையில், அவர் மாலையிலோ வார இறுதி நாட்களிலோ தனது சொந்த எழுத்துப் பணியைத் தொடர்ந்தாள்.

.

கவலையளிக்கும் போக்குகளை அவள் கவனிக்க ஆரம்பித்தாள்.
அதிக அளவில் குப்பைகள் கடலில் கொட்டப்பட்டபோது உயிரினங்களின் வாழ்க்கை பிணைப்பிற்கு என்ன ஆனது?
அதிகரித்து வரும் கடல் வெப்பநிலை உயிரினங்களை எவ்வாறு பாதித்தது?
1951 ஆம் ஆண்டில் அவர் அதிக எண்ணிக்கையில் விற்பனையான ***தி சீ அரவுண்ட் அஸ்*** என்ற ஒரு புத்தகத்தை வெளியிட்டார்.
ஒரு வருடம் கழித்து முழு நேரம் எழுதுவதற்காக தனது வேலையை விட்டுவிட்டார்.
அடுத்த மூன்று ஆண்டுகளில், அவர் ஆராய்ச்சி செய்து ***தி எட்ஜ் ஆஃப் தி சீ*** என்ற நூலை எழுதினார்
லிஃப்ட், அழகு நிலையங்கள், வாடகை வண்டிகள் மற்றும் உணவகங்களில் மக்கள் அவளிடம் ஆட்டோகிராப் கேட்கும் அளவுக்கு அவள் நன்கு அறியப்பட்டாள்.

ரேச்சல் திருமணம் செய்து கொள்ளவில்லை.
அவர் சம்பாதித்துக் குடும்பத்தைக் காப்பாற்றும் ஒரே நபர் மட்டுமல்ல, வேலையில்லாமல், நோய்வாய்ப்பட்டவர்களாக அல்லது இறக்கும் தருவாயில் இருக்கும் பல்வேறு குடும்ப உறுப்பினர்களை கவனித்துக்கொல்வதிலும் அவர் பொறுப்பு மிக்கவராக இருந்தார்.
ஐம்பதாவது வயதில் அவர் தனது உடன்பிறந்தவரின் ஐந்து வயது மகனான ரோஜரை தத்தெடுத்தார்.
இப்போது ஒரு குறும்புக்காரச் சிறுவனைக் கவனித்துக் கொள்வது மற்றும் எழுதுவதற்கு நேரம் ஒதுக்குவதற்குமான சவாலையும் அவர் எதிர்கொண்டார்.

எப்பொழுதும் போல, இயற்கை வெளியே அவருக்கு அடைக்கலமாக இருந்தது. அவர் தனக்கு மிகவும் பிடித்த மைனே கடற்கரையில் சில ஏக்கர் நிலத்தை வாங்கி, அங்கு ஒரு வீட்டைக் கட்டினார்.
“(A treasure of a place) பொக்கிஷத்தலம்," என்று அதற்கு பெயரிட்டார்.
ஆழந்த, கருமையான மரங்களில் பாசி மற்றும் பெரணிகளை ஆய்வு செய்ய பகலில் **ரோஜருடன்** சுற்றித்திரிவதில் மகிழ்ச்சியுற்றார்அவர்.
இரவில் அலை குறைந்திருக்கும் போது அவர் டார்ச் விளக்கை எடுத்துக்கொண்டு பாறைகள் நிரந்த கடற்கரைக்கு தனியாகச் சென்றார்.
அவர் கால்சட்டையை சுருட்டிவிட்டுக்கொண்டு குப்புறப்படுத்து ஒரு புழுவைபோல நெளிந்தவாறு,பெரிய நண்டுகள், நட்சத்திரமீன்கள் மற்றும் கடற்சாமந்திகளை ஆராய்ந்தார்.

1958 இல் அவர் கடினமான புதிய திட்டப்பணி ஒன்றைத் தொடங்கினார். இரண்டாம் உலகப் போர் முடிவடைந்தபோது, அமெரிக்காவில் இரசாயன வணிகம் மிகவும் சக்திவாய்ந்ததாக மாறியிருந்தது.
பூங்காக்கள் மற்றும் இயற்கைப் பாதுகாப்பிடங்கள் நீச்சல் குளங்கள் மற்றும் நெரிசலான நகரத் தெருக்களில் கூட பூச்சிகளைக் கொல்லும் ரசாயனங்கள் அதிக அளவில் தெளிக்கப்படுவது வழக்கமாகி இருந்தது. 1945 ஆம் ஆண்டிலேயே, நாடு முழுவதும் குறைந்து வரும் பறவைகளின் எண்ணிக்கை பற்றிய ஆய்வுகளைப் பற்றி ரேச்சல் படித்திருந்தார்.
ஒவ்வொரு ஆண்டும் கூடு கட்டும் மற்றும் இடம்பெயரும் பறவைகளின் எண்ணிக்கை குறைந்து வருவதை ஆராய்ச்சியாளர்கள் தெரிவித்தனர்.
அவர் எவ்வளவு அதிகமாக விசாரிக்கிறாரோ, அவ்வளவு அதிகமாகக் கவலை கொண்டார். பூச்சிக்கொல்லிகள் பறவைகள், பூச்சிகள், மீன்கள் மற்றும் பிற விலங்குகளுக்கு ஆபத்தானவை.
மக்கள் நிலை என்ன?
பெரு வணிகங்கள், இரசாயனப் பயன்பாட்டை அங்கீகரித்த கூட்டாட்சி அமைப்புகள் அல்லது ரசாயனங்களின் விளைவுகள் குறித்து தரக்குறைவான ஆராய்ச்சியை மேற்கொண்ட பல்கலைக்கழகங்களுக்கு எதிராக யாரும் நிலைப்பாட்டை எடுக்கவில்லை.
அவர் ஆபத்தான பிரதேசத்தில் நுழைவதை அறிந்தார்.
இருப்பினும், தொழில் நிறுவனங்கள், அரசு அல்லது எந்தப் பல்கலைக்கழகத்துடனும் அவருக்கு எந்தத் தொடர்பும் இல்லாததால், தன்னால் இன்னும் சுதந்திரமாக ஆதாரங்களைச் சேகரிக்க முடியும் என்று உணர்ந்தார்.
அவர் எழுதியதை மக்கள் படித்துவிட்டு சுத்தமான காற்று மற்றும், சுத்தமான தண்ணீருக்காக போராடுவார்கள் என்று எண்ணினார்.


DDT
D D T

ரேச்சலின் நெருங்கிய நண்பர்களுக்கு மட்டுமே தெரியும், அவர் காலத்திற்கு எதிராக போராடிக்கொண்டிருகிறார் என்று.
1960 இல் அவருக்கு மார்பக புற்றுநோய் இருப்பது கண்டறியப்பட்டது.
அவரது **சைலண்ட் ஸ்பிரிங்** புத்தகம் அவர் மிகவும் ஆழமாக நம்பிய ஒன்று
"எதுவும். .. என்னை எப்போதுமே அதிலிருந்து பின்வாங்க வைத்ததில்லை.'' என்றார்.
சைலண்ட் ஸ்பிரிங் புத்தகத்தை எழுதி முடிக்க நான்கு வருடங்கள் உழைத்தார்.
பூச்சிக்கொல்லிகளைப் பற்றிய மிகவும் கவனமான அவரது ஆராய்ச்சி மெதுவாக நடந்தது.
எழுதுவதும் திருத்தி எழுதுவதும் கூட மெதுவாகவே நடந்தது.
அறிவியலாளர்கள் மட்டுமல்ல - அனைவரும் புரிந்து கொள்ளக்கூடிய ஒரு புத்தகத்தை உருவாக்க விரும்பினார்.
நோய் மற்றும் சோர்வுடன் படுத்த படுக்கையாக இருந்த போதிலும்,
அவர் கைவிட மறுத்தார்.
"என்னால் முடிந்த அனைத்தையும் நான் செய்யவில்லை என்றால்நான் மீண்டும் ஒரு **த்ராஷின்** பாடலை மகிழ்ச்சியுடன் கேட்க முடியாது," என்று விளக்கினார் அவர்.

1962இல் **சைலண்ட் ஸ்பிரிங்** புத்தகம் வெளியானதோடு சிறந்த விற்பனையையும் கண்டது. இந்தப் புத்தகம் இரசாயன வணிகர்களிடத்திலிருந்து கனல் தெறிக்கும் விமர்சனப் புயலைக் கிளப்பியது. நாடாளுமன்றம் வழக்கை ஏற்று நடத்தியது. அதைத் தொடர்ந்து விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டன. புதிய சட்டங்கள் இயற்றப்பட்டன. தனது துணிச்சலான புத்தகத்தால் ஈர்க்கப்பட்ட பல சாதாரண மக்களால் உருவாகிய பல நேர்மறையான சுற்றுச்சூழல் மாற்றங்களைக் காண **ரேச்சல்** உயிரோடு இல்லை. **ஏப்ரல் 14, 1964** அன்று, பறவைகளின் பாடல் நிறைந்த முன் வசந்தகால சூரிய அஸ்தமனத்திற்கு முன்பு, ஐம்பத்தாறு வயதான **ரேச்சல்** மறைந்துவிட்டார்.



பின்னுரை: சைலண்ட் ஸ்பிரிங் புத்தகம் வெளியானப் பிறகு என்ன நடந்தது

சைலண்ட் ஸ்பிரிங் என்ற சக்திவாய்ந்த தலைப்பு, பாடும் பறவைகள் பாடாது அமைதியாகிப்போன வசந்தத்தின் ஒரு காட்சியிலிருந்து பிறந்தது. ஜூன் 16, 1962 இல் தொடங்கி சைலண்ட் ஸ்பிரிங்கின் பகுதிகளை முன்கூட்டியே நியூ யார்க்கர் அச்சிட்டது. ஹொக்டன் மிஃப்லின் செப்டம்பர் 27ஆம் தேதி புத்தகத்தை வெளியிட்டது. உடனடியாக, ஒரு பெரிய இரசாயன நிறுவனம் தி நியூ யார்க்கர் மற்றும் ஹொக்டன் மிஃப்லின் மீது வழக்குத் தொடுப்பதாக அச்சுறுத்தியது. ஆனால் அந்த இதழோ, புத்தக வெளியீட்டாளரோ பின்வாங்கவில்லை. ஒரு முழுமையான இரசாயன வணிக நிறுவனங்களின் தாக்குதல் வெடித்தது. சைலண்ட் ஸ்பிரிங் உடனடியாக அதிகமாக விற்பனையாகத் தொடங்கியது. இரசாயன வணிக மற்றும் பல அரசாங்க நிறுவனங்களும் சைலண்ட் ஸ்பிரிங் மற்றும் கார்சனுக்கு எதிராக ஒரு வன்மம் மிக்க, பணபலத்துடன் கூடிய பிரச்சாரத்தை மேற்கொண்டன, அவர் "ஒரு வெறிபிடித்த பெண்" என்று அழைக்கப்பட்டார், அவர் "ஒரு கம்யூனிஸ்ட்டாக இருக்கலாம்." முன்னாள் விவசாய செயலாளர் ஒருவர் ஜனாதிபதி டுவைட் டி. ஐசனோவருக்கு கடிதம் எழுதி, "குழந்தைகள் இல்லாத ஒரு கன்னி ஏன் மரபியல் பற்றி இவ்வளவு அக்கறை காட்டுகிறார்" என்று கேட்டார். ஒரு விமர்சகர் அவரது புத்தகத்தை "உணர்ச்சி மற்றும் பீதியைக் கிளப்புவது" என்றார், மேலும் "ஆர்கானிக் தோட்ட ஆர்வக்கோளாறுள்ள மற்றும் பிற உதிரி குழுக்களுக்கு அப்பாற்பட்ட" தவறான புரிதல் கொண்ட கூச்சலிடும் குழுவைச் சேர்ந்தவர் என்று அழைத்தனர். இறுதியில், கார்சன் நியாயமானவர் என்று நிரூபனமானது.

பொதுமக்களின் கண்டனக்குரல் நாடாளுமன்றம், விவசாயம் மற்றும் உள்துறை, பொது சுகாதார சேவைத் துறை மற்றும் உணவு மற்றும் மருந்து நிர்வாகம் ஆகியவற்றிற்கு எதிராக கடிதங்கள் குவியத் துவங்கியது. செய்தித்தாள்கள் மற்றும் பத்திரிகைகள் கடுமையான தலையங்கங்களையும் வாசகர் கடிதங்களையும் வெளியிட்டன. ஆகஸ்ட் 1962 இல், ஜனாதிபதி ஜான் எஃப். கென்னடி, பூச்சிக்கொல்லியின் பயன்பாட்டை விசாரிக்க ஜனாதிபதியின் அறிவியல் ஆலோசனை கமிட்டியின் சிறப்புக் குழுவை நியமித்தார். அவர்கள் வெளியிட்ட அறிக்கை இரசாயன வணிக மற்றும் அரசாங்க நிறுவனங்களை விமர்சித்தது. ஏப்ரல் 1963 இல் CBS அறிக்கைகள் பற்றிய சிறப்பு நேர்காணல் வழியாக கார்சன் தொலைக்காட்சி நேயர்களுக்கு நேரடியாக தனது எச்சரிக்கைகளை வழங்கினார். சுற்றுச்சூழல் அபாயங்கள் குறித்த செனட் குழு இரண்டு மாதங்களுக்குப் பிறகு கார்சனின் அவசர சாட்சியத்தை தொலைக்காட்சியில் ஒளிபரப்பியது. இதற்கிடையில், சைலண்ட் ஸ்பிரிங் கிரேட் பிரிட்டனில் சிறந்த விற்பனைப் புத்தகமாகியதோடு பிரான்ஸ், ஜெர்மனி, இத்தாலி, டென்மார்க், ஸ்வீடன், நார்வே, ஹாலந்து, ஸ்பெயின், பிரேசில், ஜப்பான், ஐஸ்லாந்து, போர்ச்சுகல் மற்றும் இஸ்ரேலில் வெளியிடப்பட்டது. கௌரவங்களும் விருதுகளும் குவிந்தன. மார்ச் 1963 இல், தேசிய வனவிலங்கு கூட்டமைப்பால் அவர் ஆண்டின் சிறந்த இயற்கை வள பாதுகாவலராக தேர்ந்தெடுக்கப்பட்டார். அமெரிக்காவின் ஐசக் வால்டன் லீக்கின் பாதுகாப்பு விருதையும், நேஷனல் ஆட்பன் சொசைட்டியின் ஆட்பன் பதக்கத்தையும், அமெரிக்க புவியியல் சங்கத்தின் கல்லம் பதக்கத்தையும் பெற்றார். அமெரிக்கன் அகாடமி ஆஃப் ஆர்ட்ஸ் அண்ட் லெட்டர்ஸ்க்கு தேர்ந்தெடுக்கப்பட்ட நான்கு பெண்களில் இவரும் ஒருவர். தீவிரமான சுற்றுச்சூழல் அச்சுறுத்தல்களை எதிர்த்துப் போராட இன்னும் நிறைய செய்ய வேண்டியுள்ளது. அதே நேரத்தில்,

உலகை மாற்றும் ஆற்றலைப் பெற்றிருக்கும் உண்மை எப்படித் தெளிவாக வெளிப்படுத்தப்படுகிறது என்பதை மனதில் கொள்வது முக்கியமாகும். சைலண்ட் ஸ்பிரிங் வெளியிடப்பட்டதைத் தொடர்ந்து வந்த ஆண்டுகளில், சுற்றுச்சூழலைப் பாதுகாக்கும் கூட்டாட்சி சட்டங்களை நிறைவேற்றுவதற்கு அடிமட்ட சுற்றுச்சூழல் குழுக்கள் மற்றும் பிற உள்ளூர் குடிமக்களுக்கு ஊக்கமளித்தது. நீதிமன்றத்தில் நீண்ட காலப் போராட்டங்களுக்குப் பிறகு, 1972 ஆம் ஆண்டு DDTயின் பரவலான பயன்பாடு தடைசெய்யப்பட்டது. கார்சன் இட்ட அடித்தளத்திற்கு நன்றி, தொடர்ச்சியான ஆராய்ச்சி DDT பறவையின் ஆரோக்கியமான இனப்பெருக்கத்தில் பேரழிவுமிக்க விளைவுகளை ஏற்படுத்துகிறது என்பதை நிரூபித்தது. சைலண்ட் ஸ்பிரிங் பல பறவை இனங்களைக் காப்பாற்றியது மட்டுமல்ல; அந்த நேரத்தில் ஒரு புதிய கருத்தாகக் கருதப்பட்ட விடயத்திற்கு மில்லியன் கணக்கானவர்களின் மனதையும் அது திறக்கச் செய்தது: காற்று, நீர் மற்றும் மண்ணுக்கு நாம் என்ன செய்கிறோம் என்பது நம்மை, எதிர்கால சந்ததியினர் மற்றும் பூமியை நம்முடன் பகிர்ந்து கொள்ளும் விலங்குகள் மற்றும் தாவரங்களை நேரடியாக பாதிக்கிறது. ரேச்சல் கார்சன் ஒரு உறுதியான நபர் எவ்வாறு மாற்றத்தை ஏற்படுத்த முடியும் என்பதை நிரூபித்தார். தற்போது புவி வெப்பமயமாதல் பிரச்சினைகளில் பணியாற்றி வரும் முன்னாள் துணை ஜனாதிபதி அல் கோர் கூறியது போல், "சைலண்ட் ஸ்பிரிங் வனப்பகுதியில் ஒரு துயர்க்குரலாக வந்தது, ஆழமாக உணரப்பட்டது, முழுமையாக ஆராயப்பட்டதோடு, அற்புதமாக எழுதப்பட்ட வாதத்தால் வரலாற்றின் போக்கை மாற்றியது. இந்த புத்தகம் இருந்திருக்காவிட்டால், சுற்றுச்சூழல் இயக்கம் நீண்ட காலம் தாமதமாகியிருக்கலாம்,

அல்லது ஒருபோதுமே தோன்றாமல் கூட போயிருந்திருக்கலாம்.